***World Christian Fellowship***
www.wcflondon.com
wcflondon@gmail.com

# கலாத்தியர்
## பாடம் 19 பரிசுத்த ஆவியானவர்
## மீண்டும் பிறப்பதில் ஆவியானவரின் கிரியைகள்

***கலாத்தியர் 3:1-3, புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப் பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. 2. ஒன்றை மாத்திரம் உங்களிடத்தில் அறியவிரும்புகிறேன்; நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்? 3. ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?***

*தேவ ஆவியானவர் அவரை விசுவாசிப்பவர்களுக்கு வரங்களை கொடுக்கிறார். சரீரமாகிய சபையை கட்டி எழுப்ப விசுவாசிகள் மூலமாய் வெளிப்படையாக அந்த வரங்கள் மூலம் கிரியைகள் செய்கிறார். சபையின் வாழ்க்கை மற்றும் கிறிஸ்துவின் சரீரமாகிய அதில் பரிசுத்த ஆவியானவர் ஒரு முக்கிய மைய புள்ளி ஆவார்.*

*இன்றைய காலங்களில் சபையானது பரிசுத்த ஆவியானவரை விட்டு விலகிவிட்டது மற்றும் தங்கள் சுய உளவியல் ரீதியான கொள்கைகளை உருவாக்கி கொண்டது. நிறைய சபைகள் பரிசுத்த ஆவியானவரை விட்டு பின்வாங்கிற்று!*

*நவீன கால சபைகள் பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் சுத்திகரிக்கப்படுதலை உருவாக்கிவிட்டது. பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் சுத்திகரிக்கப்படுதலே இல்லை. பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் சுத்திரகரிக்கப்படுதல் போன்ற முறைமைகள் அல்லது வழிகள் உருவாக்கப் படுமானால் அது முற்றிலும் தவறானதே. அது பொய் மற்றும் வஞ்சிக்கிற காரியமாக உள்ளது கீழ்க்கண்டவற்றில் அவைகள் முடிகிறது.*

- ✓ *பாவம் நிறைந்ததாக,*
- ✓ *ஒழுக்கக்கேடு, மற்றும்*
- ✓ *தெய்வீக நிலையிலிருந்து மாற்றுகிறதாய் உள்ளது.*

*தேவனால் மட்டுமே அவருடைய பரிசுத்த ஆவியின் மூலம் பரிசுத்தப்படுத்த முடியும்.*

*நாம் ஆவியில் தொடங்கினால் ஆவியில் தான் முடிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் தான் இரட்சிப்பின் பிரதிநிதி. அவர் மூலம் தான் தேவன் மீண்டும் பிறப்பதை செயல்படுத்துகிறார்.*

*நாம் ஆவியில் பிறந்தவர்கள்.*
*நாம் ஆவியால் மீண்டும் பெற்று எடுக்கப்பட்டோம்.*
*நாம் ஆவியானவரால் உருமாற்றப்பட்டோம்.*

*பரிசுத்த ஆவியானவரின் மூலம் தேவன் இரட்சிக்கும் கிரியையை 4வழிகள் மூலம் காணலாம்.*

1. *பாவத்தை குறித்து கண்டித்து உணர்த்துதல்*
2. *மனந்திரும்புதலுக்கான நம்பிக்கை*
3. *தேவனுடைய வார்த்தையை போதிப்பது*
4. *மீண்டும் பிறப்பது*

## *1.* பாவத்தை குறித்து கண்டித்து உணர்த்துதல்

*பாவத்தை குறித்து கண்டித்து உணர்த்துதல் மூலம் பரிசுத்த ஆவியானவர் இரட்சிப்பின் செயலை துவங்குகிறார்.*

***யோவான் 16:7-11 நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜன மாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். 8. அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். 9. அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும், 10. நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத் திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும், 11. இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத் தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார்.***

**ஒஸ்வால்ட் சாம்பெர்ஸ் {Oswald Chambers}**: *"பாவத்தை குறித்து கண்டிக்கப்படுதல் என்பது மனித வாழ்க்கையில் எப்போதாவது தான் நடைபெறும். அது தேவனை அறிந்துகொள்ள உதவும் முதல் நிலை ஆகும். இயேசு கிறிஸ்து சொன்னார் பரிசுத்த ஆவியானவர் வருவார் அவர் வந்து பாவத்தை குறித்து கண்டித்து உணர்த்துவார், அவர் மனிதனுக்குள் எழுச்சி பெற்று மனசாட்சியை தூண்டி அவனை தேவனின் பிரசனத்திற்கு வழி நடத்துவார், அது ஒரு மனிதனுடன் உள்ள உறவு அல்ல அது தேவனுடன் உள்ள உறவு."*

*"Conviction of sin is one of the rarest things that ever strikes a man. It is the threshold of an understanding of God. Jesus Christ*

*said that when the Holy Spirit came, He would convict of sin, and when the Holy Spirit rouses the conscience and brings him into the presence of God, it is not his relationship with men that bothers him, but his relationship with God."*

*பாவத்தை குறித்த குற்ற உணர்வு அல்லது கண்டிக்கப்படுதல் பரிசுத்த ஆவியானவரின் கிரியையே. இது மனிதனின் வேலை அல்ல, தேவனுடைய கிரியை. பாவத்தை குறித்து பேசும் ஒரு கருவியாக நாம் இருக்கலாம் ஆனால் கண்டித்து உணர்த்துவது தேவ ஆவியானவரின் வேலை.*

*அவிசுவாசியின் இருதயத்தோடு ஆவியானவர் தொடர்புகொள்ள ஆரம்பிப்பார், இறுதியில் தொலைந்து போன பாவமுள்ள ஆத்துமா தான் வெளியாக்கப்பட்டது மற்றும் கண்டிக்கப்பட்டதை உணர்கிறது. பரிசுத்த ஆவியானவர் அந்த நபரை தேவனுடைய வார்த்தையை முதல் முறை கேட்க செய்யும் போதே, தான் குற்றவாளியின் கூண்டில் நிறகப்பட்டு விசாரிக்கப்படுவதை உணரும் வரை, நன்கு கூர்மையான பட்டயமான தேவனுடைய வார்த்தை அவனுடைய ஆத்துமாவிற்குள் பாய்ந்து ஊடுருவி செல்கிறது. இறுதியில் நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்டு, குற்றவாளி அறிவிக்கப்படுகிறார், அப்போது அவரின் உள்ளத்தில் ஒரு குற்ற உணர்வை அவர் உணர முடியும்.*

*பரிசுத்த ஆவியானவர் பாவத்தை குறித்து உணர்த்தும் போது இப்படிதான் அவர் துல்லியமாக உணர்வார். ஒரு பாவி எவ்வளவு நாள் தான் கண்டிக்கப்படாமல் அல்லது அவரின் நடத்தைக்காக வருந்தாமல் இருக்க முடியும்?*

*எவ்வளவு நாள் தான் தன்னுடைய பாவ செயல்களுக்காக உணர்ச்சியில்லாமல் இருக்க முடியும்?*

*வேதம் சொல்லுகிறது பாவமானது அவிசுவாசிகளின் இருதயத்தை கடினமாக்கி, ஆவிக்குரிய குருடாக்கி மற்றும் உணர்வில்லாதவர்களாக்குகிறது* ***(எபேசியர் 4:18-19)****.*

*ஆனால் அப்படிப்பட்ட அறிகுறிகள் பரிசுத்த ஆவியானவர் மனிதனுடைய ஆத்துமாவை தொட்டு குற்றத்தை உணர்த்தும் அக்கணமே அவைகள் மாறுகின்றன.*

- *வெளியாக்கப்பட்டு,*
- *நிர்வாணமாக்கப்பட்டு,*
- *எதிர்கொள்ளப்படுகிறது*

*இப்படித்தான் பரிசுத்த ஆவியானவர் ஒருவரின் ஆவிக்குரிய நிலையை எடுத்துக்காட்டும் போது அவர் உணர்வார்.*

*பாவிகளின் தொலைந்த நிலையை உணர வைப்பது பரிசுத்த ஆவியானவரின் வேலை. உலகமே தேவனுக்கு முன்பாக குற்ற மனதோடு தான் நிற்கும் (ரோமர் 3:19), ஆனால் தொலைந்தவர்கள் பரிசுத்த ஆவியானவர் உணர்த்தும் வரை அவர்கள் தன்மேல் உள்ள குற்றத்தை உணருவதில்லை.*

***யோவான் 6:44, என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்.***

*மனுஷரின் இருதயத்தை இயேசுவுக்கு நேராய் திருப்புவது பரிசுத்த ஆவியானவரின் வேலை.*

*கண்டிப்பது ஒரு அவமானமோ, பயமோ, குற்றமோ, அல்லது ஆபத்தானதோ அல்ல. கண்டிப்பது என்பது தவறு நடந்து விட்டது அதை அவர்களுக்கு தெரியப்படுத்துவது.*

*நீதிமன்றத்தில் யாராவது கண்டிக்கப்பட்டால், அவர்கள் குற்றவாளியாக தீர்க்கப்பட்டு சட்டத்தின் படி தண்டிக்கப்படுவார்கள் அது தான் சரியான முறை. இந்த வகையில் பரிசுத்த ஆவியானவரின் பங்கு என்னவென்றால் நாம் செய்யும் தவறை நமக்கு சுட்டிக்காட்டுவது. கிறிஸ்து நமக்காக பலியானார், நம்முடைய பாவத்தை தன் மேல் ஏற்றுக்கொண்டார் அதன் மூலம் நீதியை சரி கட்டினார்.*

*ஆனால் நம்முடைய பாவத்தை உணர்ந்து, நம்முடைய இருதயங்களை மனந்திரும்புதலுடன் அதை ஆண்டவரிடம் கொண்டு வருவது இன்னும் உள்ளது.*

*வக்கிரமான இருதயம் கண்டிக்கப்பட்டதாக உணரத்தேவை இல்லை. அந்த வக்கிரமே அவருடைய பாவத்தைக்குறித்து அவரை வஞ்சித்து விடும்.*

*எனவே கண்டிக்கப்படுதல் வெளியிலிருந்து வர வேண்டும், பரிசுத்த ஆவியானவர் விழுந்து போன இதயத்தை பாவத்தை குறித்து உணர்த்தி கண்டிப்பார்.*

*எனவே பரிசுத்த ஆவியானவரின் கண்டிப்பின் மூலமாய் அவிசுவாசியிடம் இரட்சிப்பு நடைபெற தொடங்குகிறது.*

### *2. மனந்திரும்புதலுக்கான நம்பிக்கை*

*கண்டிக்கப்படுதல் ஒரு குற்றம்.*
*மனம்திரும்புதல் ஒரு விருப்பம்!*
*பாவத்தை விட்டு திரும்பும் ஆழமான வலிமையான விருப்பம் தான் குற்றத்திற்கு காரணம்.*

***2 தீமோத்தேயு 2:24-25, கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ள***

***வனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனு மாயிருக்கவேண்டும்.25. எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும்,***

*தேவன் அவர்களுக்கு மனம்திரும்புதலை கொடுக்க வேண்டும் என பவுல் சொல்லுகிறார் .*

*மனிதன் தானாக மனம் திரும்புவதில்லை.*
*மனிதன் தன்னுடைய பாவத்தின் உண்மைத்தன்மையை உணர்ந்து தன்னை தான் வஞ்சித்து, ஒளியை விட இருளை அதிகமாய் விரும்புகிறான்.*

***அப்போஸ்தலர் 11:18, இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து: அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும் புதலை தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.”***

*தேவன் புறஜாதியார் புதிய வாழ்க்கைக்கு மனம் திரும்புவதை அங்கீகரித்தார். அது இருதயத்தில் வேலை செய்யும் பரிசுத்த ஆவியானவரின் அன்பளிப்பு.*

*பரிசுத்த ஆவியானவர் தான் கண்டிக்கப்படுதலின் பிரதிநிதி, கண்டிக்கப்படுதலின் மூலம் தான் மனம் திரும்புதல் நடைபெறுகிறது.*

### *3. தேவனுடைய வார்த்தையை போதிப்பது*

*சிந்தனையில் உள்ள உண்மையை தூண்டி எழுப்புவது பரிசுத்த ஆவியானவர் தான்.*

***1 பேதுரு 1:12,* தங்கள்நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது, பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்.***

*சிந்தனையில் உள்ள உண்மையை தூண்டி எழுப்புவது பரிசுத்த ஆவியானவர் தான்.*
*முதலாவது பரிசுத்த ஆவியானவர் பிரசங்கிப்பவரை உற்சாகப்படுத்துகிறார்.*

*சுவிசேஷத்தை பிரசிங்கபவர் பரிசுத்த ஆவியானவர் மூலம் தான் பிரசங்கிக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மற்றும் உத்வேகத்தால் தான் பிரசங்கம் வருகிறது.*

*கேட்பவர்கள் அதே வல்லமை மற்றும் உத்வேகத்தால் விசுவாசத்தில் கட்டப்படுகிறார்கள்.*

***1 யோவான் 5:7,* பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்;***

*பரிசுத்த ஆவியானவர் சத்தியத்திற்கு சாட்சி கொடுக்கிறார்.*

## *4. மீண்டும் பிறப்பது*

*ஒருவர் தேவனுடைய வார்த்தையை கேட்டு பரிசுத்த ஆவியானவரால் கண்டிக்கப்பட்டு,மனம் திரும்பி மற்றும் புதிதாய் பிறக்கிறார்.*

***யோவான் 3:3, 6-8, இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். "***

***6. மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். 7. நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம். 8. காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். "***

*" ஆவியினால் பிறப்பது"*
*"நீங்கள் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டிர்கள்.*
*ஆவியினால் பிறந்தவை ஆவியாய் இருக்கும். நீங்கள் மீண்டும் கண்டிப்பாய் பிறக்க வேண்டும்.,"*

*ஆவியினால் பிறந்தவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாய் உள்ளார்கள்.*

*எனவே ஆவியானவர் மீண்டும் பிறக்கவைக்கிறார்.*

***தீத்து 3:5, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்கு தலினாலும் நம்மை இரட்சித்தார்.***

*பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளின் சுருக்கம்.*

- ✓ *அவர் பாவத்தை கண்டிக்கிறார்,*
- ✓ *அவர் இருதயத்தை மனம் திரும்புதலுக்கு நடத்துகிறார். அதாவது பாவத்திலிருந்து தேவனிடம் திருப்புகிறார்,*
- ✓ *சுவிசேஷ பிரசங்கத்தை கேட்டு மற்றும்*
- ✓ *அது இதயத்தை மீண்டும் பிறக்க வைக்கிறது.*

*இப்பொழுது இவையெல்லாம் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்கள்.*

*இவையெல்லாம் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்கள் என்று நாம் அறியும் போது, நாம் பிரசங்கம் செய்ய எப்பேர்ப்பட்ட யுக்திகள் முறைகள் பின்பற்றுகிறோம் என்பது முக்கியம் இல்லை. தேவன் தான் அவைகளை செய்கிறார்.*

***இப்பொழுது விஷயம் என்னவென்றால் நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் கிரியைகளை செய்கிறீர்களா இல்லையா?***

*வக்கிரமான இருதயத்தை சரி செய்ய இதுவும் ஒரு முறை அல்ல.*

*சுவிசேஷ செய்தி பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு சொல்லப்படுகிறதா என்பது தான் முக்கியம்.*

*தேவனால் மட்டுமே இருதயத்தை திருப்ப முடியும் என்பதால் தேவனின் சத்தியம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் இருதயத்தை திருப்புகிறார்.*

***சுவிசேஷம் சொல்வது நமது கடமை.*** *இது ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்!*